**செய்தி வெளியீடு எண் : 911** **நாள் : 13.05.2023**

**செய்தி வெளியீடு**

**தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு அவர்கள் தலைமையில், 2023–24–ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கை அறிவிப்புகளின் முக்கியத்துவம் குறித்து மாநிலத்திலுள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண்அறிவியல் மைய அலுவலர்களுடன் காணொலி காட்சி மூலம் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது**

கடந்த இரண்டு ஆண்டுகளில் வெற்றிகரமாக வேளாண் நிதிநிலை அறிக்கைகளில் உழவர் நலன் சார்ந்த அறிவிப்புகளை நலத்திட்டங்களை செயல்படுத்தியதன் தொடர்ச்சியாக 2023–24 ஆம் ஆண்டின் வேளாண் நிதிநிலை அறிக்கையானது, மூன்றாவது முறையாக மாண்புமிகு வேளாண்மை –உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கடந்த 21.03.2023 அன்று சட்டமன்ற பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளையும் விவசாயிகளுக்கு விரைந்து கொண்டு சேர்க்கும் வகையில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.வெ.இறையன்பு, இ.ஆ.ப அவர்கள் இன்று (13.05.2023) அன்று வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல், வேளாண்மை விற்பனை, சர்க்கரைத் துறை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், விதைச்சான்றுத் துறைகளில் பணியாற்றும் அனைத்து நிலை வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கும் விரிவாக காணொலிக் காட்சி மூலம் சிறப்புரையாற்றினார்கள்.

தொடர்ந்து, தலைமைச் செயலாளர் அவர்கள் தனது அறிவுரையில், விவசாயிகளிடம் அதிக எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருக்கும் வேளாண்மை நிதிநிலை அறிக்கையை சிறப்பாக கிராம அளவில் விவசாயிகளுக்கு கொண்டு செல்லும் வகையில் விரிவாக்க அலுவலர்கள் மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து, தலைமைச் செயலாளர் அவர்கள், தமிழ்நாட்டின் அனைத்து வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கும் நேர்முகக்கடிதம் ஒன்றை எழுதியிருப்பதாகவும், அனைத்து அறிவிப்புகளையும் வெற்றிகரமாக செயல்படுத்தி, **கிராம முன்னேற்றத்தில் ஒரு உள்ளடக்கிய வளர்ச்சியை (Inclusive Growth) ஏற்படுத்தும் வகையில் விரிவாக்க அலுவலர்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும்** என்று எடுத்துரைத்தார்கள்.

மழைப்பொழிவு அதிகமில்லாத **தமிழ்நாட்டில் பெய்யும் ஒவ்வொரு மழைத்துளியும் முக்கியம்** என்று உழவர்கள் சேமிப்பதற்கு துறை அலுவலர்கள் உதவ வேண்டும் எனவும் சமவெளிப்பகுதிகளில் **கால்வாய் தூர்வாரும் பணியில் உழவர் பெருமக்களையும் இணைத்து** உரிய முறையில் பயனடைய உதவ வேண்டும்

எனவும் கூறி **நுண்ணீர் பாசனத்தை குறிப்பாக தோட்டக்கலைப் பயிர்களில் பெருமளவு ஊக்குவித்திட வேண்டும்** எனவும் அறிவுறுத்தினார்.

களப்பணியின் முக்கியத்தைக் கூறுகையில், **கோப்புகளைப் பார்க்கும் பணியல்ல உங்கள் பணி; தோப்புகளைப் பார்க்கும் பணி என்றும்; தபால்களைப் பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு முன் பயிர்களைப் பாதுகாத்திட நடவடிக்கை எடுங்கள் என்றும்; அலுவலகத்தில் அமர்ந்து கண்காணிக்கும் பணியல்ல உங்கள் பணி; வரப்பில் நடந்து பயிர்கள் பச்சை தொற்றிக்கொள்வதைப் பார்க்கும் பணி** என்றும் எவ்வளவு களப்பணி மேற்கொள்கிறோமோ அந்த அளவிற்கு வாழ்வில் வெற்றி கிடைக்கும் என்றும் விரிவாக்க அலுவலர்களுக்கு எழுச்சி ஊட்டினார்.

நடப்பாண்டில் ஒதுக்கப்பட்டுள்ள கிராமங்களில் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றி, கிராமத்தில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உருவாக்கும் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், விரிவாக்க அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள், தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் சிறுதானியப் பயிர்களில் சாகுபடிப் பரப்பு, உற்பத்தியை உயர்த்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், சிறுதானியங்களை மானாவாரிப் பயிராக கருதாமல், அதிக வருவாய் தரும் பயிராக நினைத்து, உற்பத்தியை உயர்த்த விரிவாக்க அலுவலர்கள் முயற்சிக்க வேண்டும் எனவும் அகில உலக சிறுதானிய ஆண்டினை முன்னிட்டு, சிறுதானியங்களின் முக்கியத்துவத்தை பொதுமக்களிடையே உணர்த்தும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பயிற்சிப்பட்டறை நடத்த வேண்டும் எனவும், பொதுமக்களிடையே சிறுதானியங்களின் பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில் விழிப்புணர்வு முகாம்கள், சிறுதானிய திருவிழாக்கள், கருத்தரங்குகள் நடத்துதல் பற்றியும் தலைமைச் செயலாளர் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

தொடர்ந்து, அங்கக வேளாண்மையின் முக்கியத்துவத்தை விவசாயிகளிடையே பரவலாக்கும் முயற்சியை வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் முன்னெடுத்துச் சென்று, அங்கக வேளாண்மைக்கான இடுபொருட்களை கிராமங்களில் அதிகளவில் கிடைப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு வேளாண்மை அலுவலரும் தாங்கள் பணியாற்றும் பகுதிகளில் ஏதாவது ஒரு குக்கிராமத்தை தேர்வு செய்து அங்கு, **அங்கக வேளாண்மைத் தொகுப்பு ஒன்றை உருவாக்குவதற்கு இலக்கு நிர்ணயிக்க வேண்டும்** எனவும் கேட்டுக் கொண்டார்கள்.

ஏரி, குளங்களில் நீர் வற்றிய பின்னர், **வண்டல் மண்ணை விளைநிலங்களுக்கு பயன்படுத்தும் வகையில்,** தற்போது வறண்டிருக்கும் ஏரி, குளங்களைக் கண்டறிந்து மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று, நிறைய விவசாயிகள் பயன்படும் வகையில் இப்பணியை மேற்கொள்ள வேண்டும் எனவும்

**விவசாயிகளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும்** எனவும் தலைமைச் செயலாளர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

வேளாண் தகவல்களை விவசாயிகளுக்கு விரைவாக கொண்டு செல்வதில் தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து வேளாண் விரிவாக்கத்தில் தகவல் தொழில்நுட்பத்தினை அதிக அளவில் பயன்படுத்தி தொழில் நுட்பங்களையும் திட்டப்பலன்களையும் விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்க வேண்டும். தேசிய மின்னணு வேளாண்மை திட்டம், இ–வாடகை மூலம் வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம் போன்ற விரிவாக்க பணிகளை முனைப்புடன் செயல்படுத்த வேண்டும். உழுவதற்கும், நடுவதற்கும், களை பறிப்பதற்கும் ஆட்களை நியமித்தால் அதிக செலவாகும். உழவர்க்கு ஒன்றும் மிஞ்சாது. **உழுபவர்களை அழுபவர்களாக ஆக்காமலிருக்க இயந்திரமயமாக்கலை பரவலாக்குங்கள்** என்று கேட்டுக்கொண்டார்.

பயிர் சுழற்சி மூலம் மண் வளத்தைக் காக்க உழவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று கூறுகையில் **மண்ணிடம் கூட நாம் மனிதாபிமானமாக இருந்தால், மண் நமக்கு அள்ளித்தரும்.** நெல்லுக்குப்பின் பயறுவகைப் பயிர்களைப் பயிரிட்டால் மண்ணின் வளம் அதிகரித்து அடுத்துப் பயிரிடும் நெல் நல் மகசூல் தரும்.

**வயல்கள் பொய்க்கலாம்; மேழிச் செல்வம் பொய்க்காது; பயிர்கள் பொய்க்கலாம்; உயிர்கள் பொய்க்காது** என்று உரைத்து, பயிருடன் கால்நடை பராமரிப்பு, கோழி, ஆடு வளர்ப்பு உள்ளிட்ட கலப்புப் பண்ணையத்தை ஊக்குவிக்க வேண்டும் எனவும் வேளாண்மை உற்பத்தியை உயர்த்துவதில் தரமான விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்டக் கலவை போன்ற இடுபொருட்களை தரமான முறையில் உற்பத்தி செய்து உரிய காலத்தில் விநியோகிக்க முனைப்புடன் செயல்பட வேண்டும், பராமரிப்பே இல்லாமல் பயனளிக்கும் பனை மரங்களை மாநிலத்தில் அதிகரிக்கும் வகையில், பனை மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்திட வேண்டும். பனை மரங்களில் முக்கியத்துவத்தை உணர்ந்து, பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன், பனை தொடர்பான ஆராய்ச்சியை வலுப்படுத்தி, பனை சார்ந்த பொருட்களின் மதிப்புக் கூட்டுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்து மக்களுக்கு தரமான பனை சார்ந்த பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்திட வேண்டும்.

விவசாயிகள் சாகுபடியோடு நின்றுவிடாமல், தரம் பிரித்தல், மதிப்புக்கூட்டுதலிலும் ஈடுபட்டு, விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்க உதவ வேண்டும். புவிசார் குறியீடு பெறுவதன் மூலம் விளைபொருட்களுக்கு மதிப்பு உயர்ந்து கூடுதல் விலை கிடைக்கும் என்பதால் புவிசார் குறியீட்டினை விரைவில் பெற துறை அலுவலர்கள் முயற்சிக்க வேண்டும் என்றும் தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இறுதியில், **வேளாண்மை விரிவாக்கம் என்பது வெறும் பணியல்ல: அர்ப்பணிப்போடு செய்ய வேண்டிய அறப்பணி; உங்கள் பணி பிழைப்பல்ல; இயற்கையின் அழைப்பு** என்றும், விவசாயிகளுக்கு வேண்டிய அனைத்து விதமான பணிளையும் உழவர் நலன் சார்ந்த இதரத் துறை அலுவலர்களுடன் சிறப்புடன் மேற்கொள்ள வேண்டும். **குறியீடு வேறு; குறிக்கோள் வேறு எனவே, இலக்கினை முன்வைத்துப் பணியாற்றாமல் ஏற்படுத்தக்கூடிய நல்மாற்றங்களை முன்னிறுத்திப் பணியாற்ற வேண்டும்** என்று கூறினார்.

**வேளாண் அலுவலர்கள் விவசாயிகளுக்கு உதவுதல் என்பது இறை வழிபாடுக்கு சமம்** என்று எண்ணி, விவசாயிகளுடன் நெருங்கிப் பழகி புன்னகையுடன் விரிவாக்கப் பணியை செயல்படுத்த வேண்டும். அதன் மூலம் விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும் என்று தலைமைச் செயலாளர் அவர்கள் அனைத்து வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கு எழுச்சியுரை ஆற்றினார்கள்.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / சர்க்கரைத்துறை ஆணையர் திரு. சா. விஜயராஜ் குமார், இ.ஆ.ப., வேளாண்மை இயக்குனர் திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குனர், முனைவர் ச. நடராஜன், இ.ஆ.ப., தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் செயல் இயக்குனர் திரு.த. அன்பழகன் இ.ஆ.ப., உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in